# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை உள்ளக வடிவமைப்பாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

***1998 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை உள்ளக வடிவமைப்பாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மயந்த திசாநாயக்க அவர்களால் 2016, ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, மாச்சு மாதம் 14 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **97 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 10.00**

## இலங்கை உள்ளக வடிவமைப்பாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

### 1998 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை உள்ளக வடிவமைப்பாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை உள்ளக வடிவமைப்பாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1998 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை உள்ளக வடிவமைப்பாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** 1998 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை உள்ளக வடிவமைப்பாளர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 4 ஆம் பிரிவு பின்வரும் மேலதிகத் தத்துவங்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) உள்ளக வடிவமைப்பு துறையில் உள்ள தொழில் நடத்துநர்கள் இந்தக் கூட்டுத்தாபனத்தில் அங்கத்துவம் பெற்றிருத்தல் ஒரு தேவைப்பாடாகும். இவை உள்ளக வடிவமைப்பு மற்றும் தொழிற்சார் அந்தஸ்தினை அங்கீகரித்தல் ஆகியவற்றிற்கு பொருந்தும் நன்னெறி சார்ந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மற்றும் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்தல், கூட்டுத்தாபனத்தில் இதற்கான அனுமதியினை பெற்று, உள்ளக வடிவமைப்பாளர்கள், உள்ளக கட்டிடக் கலைஞர்கள், உள்ளக தொழினுட்பவியலாளர் மற்றும் அலங்கரிப்பாளர்கள் ஆகியோர்கள் தங்களின் தொழில்களை நடாத்துவதற்கு ஏதுவாக உரிமத்தை பெறுவதற்கான தகைமையைப் பெறுவர்.

(2) உள்ளக வடிவமைப்பில் நிபுணத்துவம் பெற்றோரிற்கும் இப்பேர்ப்பட்ட அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு தகைமையானோரிற்கும் பட்டய அந்தஸ்து (பட்டய உள்ளக வடிவமைப்பாளர்) வழங்குவதற்கு இந்த கூட்டுத்தாபனம் ஒரு பொறுப்புள்ள அமைப்பாக அமையும்.

2-PL 009772 -300 (2016/02)

(3) நல்ல வடிவமைப்பாளர் பெறுமதி மற்றும் உற்பத்தி தரத்தினைக் கொண்டதான உள்ளக உற்பத்திகளின் சந்தை நிலைவர ஏற்கைக்கு ஒரு தர உத்தரவாத சான்றிதழை இந்த கூட்டுத்தாபனம் வழங்கும்.

(4) உள்ளக அலங்கரிப்பு மற்றும் உள்ளக தொழினுட்பவியல் துறைகளில் தொழினுட்ப திறன்களில் செயற்திறமைக்கான சான்றிதழ்களை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தின் பரிந்துரைகள் தேவைப்பாடாகும்.

(5) உள்ளக வடிவமைப்பு கல்வித்துறையில் உச்ச நியமங்களை நிறுவுவதற்காக பாடத்தொகுதி அபிவிருத்திக்கு இந்த கூட்டுத்தாபனமானது உதவிகளை மேற்கொள்ளும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்